சிறப்பிதழ்
**Special Issue**

*Chief Editor*
*Dr. M. Sadik Batcha*

*Advisory Editor*
*Dr. N. Chandra Segaran*

*Editorial Board*
*Dr. MAM. Rameez*
*Dr. Jeyaraman*
*Dr.A. Ekambaram*
*Dr. G. Stephen*
*Dr. S. Chitra*
*Dr. S.Senthamizh Pavai*
*Dr. A. Shunmughom Pillai*
*Dr. P. Jeyakrishnan*
*Dr. Seetha Lakshmi*
*Dr. S. Easwaran*
*Dr. Kumara Selva*
*Dr. Ganesan Ambedkar*
*Dr. Krishanan*
*Dr. Kumar*
*Dr. S. Kalpana*
*Dr. T. Vishnukumaran*
*Dr M. N. Rajesh*
*Dr. Govindaraj*
*Dr. Uma Devi*
*Dr. Senthil Prakash*
*Dr. Pon. Kathiresan*
*Dr. S. Vignesh Ananth*
*Dr.M. Arunachalam*
*Dr. S. Bharathi Prakash*

3-4 பங்குனி 2052
16th - 17th March 2021

ISSN : 2321 - 984X

# நவீனத் தமிழாய்வு

*(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் ஆய்விதழ்)*

*Journal of*

# Modern Thamizh Research

*(A Quarterly International Multilateral Thamizh Journal)*

Arts and Humanities (all), Language
Literature and Literary Theory, Tamil
UGC Care Listed (Group-I) Journal

சிறப்பிதழ் : தமிழ் உயராய்வுத்துறை, விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி (தன்னாட்சி)
எளையாம்பாளையம், திருச்செங்கோடு
முதுகலைத் தமிழ்த்துறை, விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரி (மகளிர்)
வீராச்சிபாளையம், சங்ககிரி

## தமிழ் இலக்கியங்களில் வாழ்வியல்

சிறப்பிதழ் ஆசிரியர்
**Special Issue Editor**

**முனைவர் ம. கவிதா**
**முனைவர் செ. ஜெயந்தி**

*Published by*

**RAJA PUBLICATIONS**
**10, (Upstair), Ibrahim Nagar, Khajamalai,**
**Tiruchirappalli - 620 023, Thamizh Nadu, India.**
**Mobile : +91-9600535241**
**website : rajapublications.com**

19 பகுதி-5
Part -5

# முகவுரை

உலகின் முதல் மொழியாகிய எம்மொழித் தமிழ் உலகிற்குப் பல மொழிகளைக் கொடுத்தது. எம்முடைய மொழிக்கு எம்மொழியிலிருந்தும் எக்காலத்தும் எதுவும் தேவையிருந்ததில்லை. புதிய பொருட்களை உலகம் பெற்றெடுக்கும் போதெல்லாம் தனக்குத் தேவையான சொற்களைத் தானே உருவாக்கிக் கொள்ளும் வலிமை கொண்டது.

இத்துணைச் சிறப்பு வாய்ந்த மொழியில் உருவானவற்றை ஆய்வாக உலகிற்கு எடுத்துச் சொல்லும் **'நவீனத் தமிழாய்விதழ்'** பணிகளில் மகிழ்வுடன் தொடர்ந்து பங்கேற்கும் ஆய்வாளர்களுக்கு ஆசிரியர்குழு நன்றி கூறுகிறது. தொடர்ந்து பங்கேற்கத் தங்கள் முன் வேண்டுகோள் வைக்கிறது.

நன்றியுடன்

**ஆசிரியர் குழு**

| | | |
|---|---|---|
| 202. ராம்பிரசாத் | இரண்டு கவிதைகள் - மதிப்பீடு | 1097-1100 |
| 203. சு. சந்திரகுமார் | போர்க்கால வாழ்வியல் வெளிபாடும் குழந்தை. ம. சண்முகலிங்கத்தின் மண்சுமந்தமேனியர் நாடகமும் - ஓர் ஆய்வு | 1101-1107 |
| 204. பெ. சுமதி | இனவரைவியல் நோக்கில் அளம் புதினம் | 1108-1116 |
| 205. பா. சாந்தி | சங்க இலக்கியங்களில் ஓணம் விழா | 1117-1120 |
| 206. க. ரேணுகா தேவி | தமிழ் இலக்கியங்களில் வாழ்வியல் | 1121-1124 |
| 207. சு. லோகிதா | சட்டைமுனி சித்தர் காட்டும் வாழ்வியல் வழிகள் | 1125-1128 |
| 208. வை. கஜேந்திரன் | சங்க இலக்கிய மருத நில இடமேலாண்மை | 1129-1132 |
| 209. ச. மாசிலா தேவி | சங்க இலக்கியம் உணர்த்தும் வாழ்வியல் விழுமியங்கள் | 1133-1137 |
| 210. பொ. அருள் | நிலவியல் அடிப்படையில் மருதத்திணை கருப்பொருள்கள் | 1138-1142 |
| 211. த. ஆனந்தன் | பொருண்மையியல் நோக்கில் அகநானூறு-ஓர் அறிமுகம் | 1143-1145 |
| 212. பா.கிருஷ்ணமூர்த்தி | சிலப்பதிகாரத்தில் விலங்கினங்களும் பறவைகளும் | 1146-1151 |
| 213. அ. அசோகன் | சு. தமிழ்ச்செல்வியின் படைப்புகளில் அளம் காட்டும் வாழ்வியலும் வறுமையும் | 1152-1156 |
| 214. இரா. விபாஶ்ரீ & ச. மல்லிகா | நற்றிணையில் வேளாண் மேலாண்மைச் சிந்தனைகள் | 1157-1162 |
| 215. VIJAYA PRABHA V | IMPACT OF SKY YOGA AND ASHTANGA YOGA AMONG BOYS STUDENT ON ENDURANCE | 1163-1167 |
| 216. ப. சுந்தரமூர்த்தி | சங்க இலக்கியத்தில் உயிரின நடத்தைகளும் மனிதச் செயல்களும் | 1168-1175 |
| 217. ர. தேவிலட்சுமி & வெ. இராமதாஸ் | முதியவர்கள் சமூகத்தின் மதிப்புக்கும் மரியாதைக்கும் உரியவர்கள் - வேதாத்திரிய பார்வையில் முதுமை | 1176-1180 |
| 218. சீ. அகல்யா | சீவக சிந்தாமணி பதிப்பும் உ. வே. சாமிநாத ஐயாவின் வாழ்வியலும் | 1181-1185 |
| 219. R.GNANAM&A.M.SONAL | சங்ககால மக்கள் வாழ்வியல் | 1186-1189 |
| 220. சு. ஹேமலதா | நான்மணிக்கடிகை உணர்த்தும் பெண்ணியச் சிந்தனைகள் | 1190-1193 |
| 221. பி. இந்திராணி | பால்பொருள் உற்பத்தியில் பழந்தமிழர் தம் பெண்டிர் பங்களிப்பு | 1194-1197 |
| 222. மா. ஜமுனாராணி & தி. சாந்தி | யோகாவின் வளர்ச்சியும் தற்காலத்தில் அதன் அவசியமும் | 1198-1203 |
| 223. ஜ. ஜான்சிராணி | மலேசியத் தமிழர்களின் வாழ்வியல் சிறுகதைகளின் ஊடாக..! | 1204-1210 |
| 224. H. ஜோயல் குரு | தமிழர் நாட்டுப்புற இசைக்கருவிகள் | 1211-1216 |
| 225. க. கலைவேந்தன் | மணிமேகலை முன்னையப் பதிப்பு வரலாறு | 1217-1221 |
| 226. ந. கமலஹாசன் | பா. விஜய் கவிதைகளில் தொன்மமும் படிமமும் | 1222-1225 |
| 227. து. மர்பி | தமிழ்ச் சிறுகதைகளில் விளிம்புநிலை மக்களின் வாழ்வியல் | 1226-1230 |
| 228. கு. கங்காதரன் | திரையிசைப் பாடலில் மைல்கற்கள் | 1231-1240 |
| 229. வா. கவிதா | இலக்கண இலக்கியங்களில் தமிழர் வாழ்வியல் | 1241-1244 |
| 230. சா. மஞ்சுளா | பண்டையத் தமிழர்களின் நம்பிக்கைகள் | 1245-1249 |
| 231. ஆ. முருகன் | கந்தபுராணம் கற்பிக்கும் கந்தன் | 1250- 1253 |
| 232. மு. நாகராஜன் | அறநூல்களில் நட்பாராய்தல் | 1254-1259 |
| 233. ஜி.டி. பன்னீர் செல்வம் | பக்தி இலக்கியங்களில் வாழ்வியல் திருவாசகம் | 1260-1264 |
| 234. மு. பார்வதி | கற்றல் கற்பித்தலில் தொழில்நுட்பத்தின் பங்கு | 1265-1268 |
| 235. மா. பெரியசாமி | சங்ககால மருத்துவமும் சிட்லிங் மலையாளி பழங்குடிகளின் மருத்துவமும்- ஓர் ஒப்பீடு | 1269-1272 |
| 236. வீ. இராமு | பழந்தமிழ் இலக்கியத்தில் சூழலியல் நோக்கு | 1273-1275 |
| 237. அ. சலின் சியாமளா | தமிழ் இலக்கியத்தில் திருமால் வழிபாடு | 1276-1281 |
| 238. ச. சசிகலா & இரா. ரம்யாமகேஸ்வரி | ஐங்குறுநூறு தோழிக் கூற்றுப் பாடல்களில் மெய்ப்பாடு | 1282-1287 |
| 239. பா. சிவசங்கரன் & க. செல்வராஜ் | ஐங்குறுநூறு - கபிலர் பாடல்களில் உரையாடல் | 1288-1292 |
| 240. ச. சோமசேகர் | ஜெயமோகன் நாவல்கள் காட்டும் உளவியல் சிந்தனைகள் | 1293-1296 |
| 241. நா. ஶ்ரீரேகா | புறநானூற்றில் அன்பும் அறனும் | 1297-1300 |
| 242. பொ. வாசலிதேவி | தமிழ் இலக்கியங்களில் வாழ்வியல் | 1301-1304 |
| 243. ச. வீரபத்திரன் | குறுந்தொகையில் வாழ்வியல் விழுமியங்கள் | 1305-1308 |
| 244. VIJAYAKUMAR. N & MURALI. M | A STUDY ON FINANCIAL MANAGEMENT CONCEPTS IN THIRUKURAL | 1309-1312 |
| 245. சு. செந்தமிழ்செல்வி & பெ. சுந்தரமூர்த்தி | வளமான வாழ்வு நல்கும் யோக உணவு முறைகள் மற்றும் யோகப் பயிற்சிகள் | 1313-1319 |
| 246. அ. ரதிரூபி & ச. தேவநேசம்மேபல் | தமிழ் இலக்கியங்களில் வாழ்வியல் அடிப்படையிலான "நா. பார்த்தசாரதியின் கபாடபுரம்" | 1320-1323 |
| 247. சி. கௌசல்யா | தமிழர் இலக்கியத்தில் வேளாண்மை நுட்பம் | 1324-1327 |
| 248. க. சிவராஜ் | பாரதியார் வாழ்க்கையும் அரசியல் கொள்கையும் | 1328-1332 |
| 249. செ. தங்கராஜ் | நற்றிணை மருத்திணைப்பாடல்களின் வழி தமிழர் வாழ்வியல் | 1333-1335 |
| 250. கே.ஆர். கமலாமுருகன் | சங்கத்தமிழ் நவிலும் இல்லறம் எனும் நல்லறம் (தொகைநூல்கள் முன் வைத்து) | 1336-1339 |
| 251. ப. சுமதி | சங்ககால விளையாட்டுகளில் சி.சு. செல்லப்பா கதையில் ஓர் ஒப்பீடு | 1340-1344 |


Published by : **Raja Publications,** No. 10, Upstair, Ibrahim Nagar, Khajamalai, Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India. Mobile : 9600535241
Printed : **The Printing House,** Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India. Ph : +91 - 431-2420121

# கந்தபுராணம் கற்பிக்கும் கந்தன்

ஆ. முருகன்
முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்), தமிழ் உயராய்வுத் துறை,
விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), எளையாம்பாளையம்,
திருச்செங்கோடு, தமிழ்நாடு, இந்தியா.

## முன்னுரை

அழகுக் கடவுளான முருகக் கடவுளை முழு முதற் கடவுளாக ஏற்று வழிபட்டுவருகின்ற சமயமே கௌமார சமயமாகும். இச்சமயத்தவர்கள் அனைவரும் நெற்றியில் திருநீரும் ஓம் சரவணபவ என்ற மந்திரசொல்லுமே தங்களுக்கான வேத வாக்கு என்று வாழ்பவர்கள். சிவ பெருமானின் நெற்றிக்கண்ணிலிருந்து வந்த ஒளியிலிருந்து தோன்றிய கடவுளே முருகக் கடவுள் என்பதால் இச்சமயத்தவர் சைவ சமயக் கடவுள்களையும் வழிபடுவர். கௌமார வழிபாட்டின் சிறப்புகள் என்ற இந்த இயலில் முருகக் கடவுள் பற்றிய முடிந்த முடிவான அனைத்துச் செய்திகளும் முறையாக ஆராயப்பட்டு அதனைத் தொடர்ந்து முருகக் கடவுளைப் போற்றிப் பாடியுள்ள புலவர்களின் பார்வையில் கௌமார வழிபாட்டு முறையின் சிறப்புகளும் முறையே ஆராயப்படவுள்ளது.

## முருகக் கடவுள்

சமுதாய வாழ்க்கையின் மாற்றங்கள் அரசியல், பொருளியல் காரணங்களால் நடக்கின்றன. இந்த வாழ்வியல் மாற்றங்களானது மனிதனால் வணங்கப்படும் கடவுள்களின் மீதும், அக்கடவுள் பற்றிய கருத்துக்களின் மீதும் பிரதிபளித்து காலத்துக்கு ஏற்ப மாறுகின்றது. ஒரு சமுதாயத்தின் வழிபாட்டு வணக்க முறைகள் என்பன அம்முறைகளின் பின்னணியில் அமைந்த நம்பிக்கைகள் மற்றும் தத்துவக் கோட்பாடுகளின் வெளிப்பாடாகும். இதன் அடிப்படையில் ஆராய்ந்தோமானால், 'கலியுக வரதன்' என்று தமிழரால் அழைக்கப்படும் முருகக் கடவுள் இன்றைய காலகட்டத்தில் மிகத் தலையாயக் கடவுளாகத் துதிக்கப்பட்டு வருகின்றார் என்பது யாராலும் மறுக்க இயலாத உண்மை.

முருகக் கடவுள் என்பது தமிழில் அமைந்த அழகிய பெயர். பெரும்பாலும் வடமொழி தென்மொழி இரண்டிலும் பொதுவாக வழங்கும் பெயர் ஸ்கந்தன் அல்லது கந்தன். கந்தர் என்பது ஸ்கந்த என்ற வடச் சொல்லின் திரிபு. ஸ்கந்தமாக இருப்பவன் எவனோ அவனே ஸ்கந்தன். ஸ்கந்தம் என்பதற்குப் பற்றுக்கோடு, கம்பம், இணைப்பு முதலிய பல்வேறு பொருள்ட்கள் உண்டு. முருகக் கடவுள் தன்னுடைய பக்தர்களுக்குப் பற்றுக்கோடாக திகழ்வதனால் கந்தன் என்ற பெயர் பெற்றார். கம்பம்போல் இருப்பதனால் கந்தன் என்ற பெயர் பெற்றார். இணைந்த பொருளாக இருப்பதனால் கந்தன் என்ற பெயர்பெற்றார் என்பர் சமயச் சான்றோர்.

## முருகக் கடவுளின் தோற்றம்

முருகு என்னும் சொல் அழகு, இளமை, தெய்வத் தன்மை, ஞான மனம், மகிழ்ச்சி, இனிமை ஆகியவற்றைக் குறிக்கும். அழகு உறைகின்ற இடமெல்லாம் முருகு கொலுவீற்றிருக்கின்றது. முருகன் வீற்றிருக்கின்றான். அவன் முருகன் என்ற சொல்லிலே இன்பந்தரும் தூய கற்கண்டாக, இன்ப வடிவினனாய், உயர்ந்த பண்புகளின் உறைவிடமாய் விளங்குபவன். உயர்தனிச் செம்பொருளாக, கண்களுக்கு அழகாக, காதிற்கு நாதமாக, நாவிற்கு அமுதமாக, நாசிக்கு மணமாக, உடலுக்கு இனிய உணர்வாக, கருத்திற்கு விருந்தாக, உயிருக்கு உணர்வாக இருப்பவன் முருகக் கடவுள்.

அழகுக் கடவுள் என்று அனைவராலும் அன்புடன் வணங்கப்படுகின்ற முருகக் கடவுளின்

தோற்றத்தினை மிச்செல் என்ற சமய அறிஞர் அவர்கள்,

"சிவனும் பார்வதியும் தொடர்ந்து காதல் விளையாட்டில் ஈடுபட்டிருப்பதைப் பார்த்த தேவர்களும் பிற கடவுள்களும் உலகத்தின் பல தேவைகளை முன்னிட்டு இந்தக் காதல் விளையாட்டை நிறுத்துமாறு கூறினாராம், அதற்குச் சிவன் தான் தன் லீலையை நிறுத்தினால் தன்னுடைய விந்தை வெளியேற்றிவிட வேண்டும் என்று சொன்னாராம். தேவர்களும் கடவுளர்களும் சிவனின் விந்தைப் பூமியில் போடச் சொன்னார்களாம். அவ்வாறு சிவன் வெளியிட்ட விந்தை அக்னி தன்னுள் எடுத்துக் கொண்டாராம். அக்னி பின்னர் தான் அவ்வாறு செய்ததற்காக வருந்தி சிவனின் விந்தை ஏற்றுக்கொள்ளுமாறு கங்கையைக் கேட்டாராம். கங்கையும் பின்னர் தனது பாரத்தைத் தாங்காமல் அந்தப் பாரத்தை ஏற்குமாறு பிரம்மாவைக் கேட்டாராம். அதற்குப் பிரம்மா அவ்விந்தைக் கொண்டுபோய் வளரும் சூரிய மலையுச்சியில் கொட்டுமாறு கங்கையிடம் கூறினாராம். பத்தாயிரம் ஆண்டுகளுக்குப்பின் அவ்விந்து 'ஸ்கந்தன்' என்ற குழந்தையாகப் பிறந்ததாம்"[1]

என்று விளக்குகின்றார்.

ஓ.ஃ.பிலாகற்றி என்னும் சமய அறிஞர் முருகக் கடவுளின் தோற்றத்தினை,

"அக்கினியின் (சூரியனின்) குழந்தை 'ஸ்கந்தன்' என்று குறிப்பது சூரியனுடன் தொடர்புடைய இயற்கையின் ஆறு காலங்களையும் வெளிப்படுத்துவதாகும்."[2]

என்று குறிப்பிடுகின்றார்.

வெரோனிகா ஐயான்ஸ் என்ற சமய அறிஞர் முருகக் கடவுளின் தோற்றத்தை,

"கார்த்திகேயன் அல்லது ஸ்கந்தன் என்பவர் போர்த் தெய்வமாகப் படைக்கப்பட்டிருக்கிறார். அக்கினி, இந்திரன் போன்றோர் பெற்ற இடத்தை இக்கார்த்திகேயன் பிடிக்கிறார். அதாவது, கடவுளர்களின் பாதுகாவலராக ஸ்கந்தன் படைக்கப்படுகிறார். கடவுளின் கடவுளாக வேத காலத்திலிருந்த இந்திரனின் இடத்தை ஸ்கந்தன் பெறுகிறார். அவர் போரில் வெற்றிக்கொடி பறக்க விடுவதையே விரும்புகிறார்."[3]

என்று குறிப்பிடுகின்றார். இத்தகைய முருகக் கடவுளின் பிறப்பினைக் கந்தபுராணம் மிக அழகாக எடுத்துரைக்கின்றது.

சிவபெருமான் தட்சிணாமூர்த்தியாக அமர்ந்ததால் உலகம் காம உணர்வின்றி இருந்தது. மேலும், அந்த நேரத்தில் தேவர்களுக்கு சிவபெருமானுடைய குமாரன் மூலம் அசுரர் படையை வெல்ல வேண்டிய அவசியமும், அவசரமும் ஏற்பட்டது. இதனால் மன்மதனைச் சிவபெருமான்மீது மலரம்புகளை ஏவிவிட தேவர்கள் பணிக்கிறார்கள். மன்மதனும் சிவபெருமான்மீது மலரம்புகளை ஏவிவிடுகின்றான். இதனால் வெகுண்ட சிவபெருமான் நெற்றிக்கண்ணால் மன்மதனை எரிக்கிறார். இதனைத் தொடர்ந்து சிவன்-பார்வதியின் திருமணம் நடைபெறுகின்றது. இதன் பிறகு தேவர்கள், சிவபெருமானிடம் சென்று அசுரர்களை அழிக்கத் தங்களுடைய படைக்கு ஒரு தலைவனைப் படைத்துத் தருமாறு வேண்டுகிறார்கள். அப்போது சிவபெருமான் ஆறுமுகங்களுடனும், ஒளிவீசும் திருமேனியுடனும் அம்பிகையை விருப்பத்துடன் பார்த்தார். சிவபெருமானின் ஆறு நெற்றிக் கண்களிலிருந்தும் கோடி சூரியனைப் போன்றதும், அக்கினிக்கு ஒப்பானதுமான ஒளி வெளிப்பட்டது. அவ்வொளியைக் கண்டு அனைவரும் அஞ்சினர். அவ்வொளியின் ஆற்றலிலிருந்து தம்மைக் காக்குமாறு தேவர்கள் சிவபெருமானிடம் வேண்டினர்.

சிவபெருமான் அக்கினியையும், வாயுவையும் பார்த்து இந்த ஆறு உருக்கொண்ட ஒளிகளையும்

எடுத்துச் சென்று நாணல் புல்லின் நடுவில் போடுமாறு பணித்தார். இருவரும் தங்களுடைய வலிமையின் மையைத் தெரிவிக்கவே, சிவபெருமான் அந்த ஒளிகளை இலேசாக்கி, அதனைத் தாங்கும் ஆற்றலையும் அவர்களுக்குத் தந்தார். அவர்கள் கங்கைக் கரையின் நாணல் நடுவில் அந்த ஒளிகளை வைத்தனர். உடனே கங்கை வற்றினாள். எனினும் அவள் நாணல் காட்டின் நடுவில் உள்ள தாமரை மலர்களில் அதனைச் சேர்த்தாள். அப்போது ஆறு முகங்களையும், பன்னிரு கரங்களையும், இரண்டு பாதங்களையும் உடைய அழகிய குழந்தை தோன்றியது. இக்குழந்தையை இந்திரன் முதலிய தேவர்கள் அனைவரும் வணங்கினர்.

திருமால் ஆறு கார்த்திகை மாதர்களை அழைத்து அந்தக் குழந்தைக்குப் பால்கொடுக்கச் சொன்னார். ஆறு கார்த்திகை மாதர்களையும் மகிழ்விக்கும் வகையில் முருகப் பெருமான் ஆறு மூர்த்திகளாக ஆனார். தாமரை மலரில் தவழும் அக்குழந்தைகள் ஆறையும் ஒவ்வொருவரும் ஒவ்வொரு குழந்தையாக எடுத்துப் பால் கொடுத்து வளர்த்தனர். அப்போது சிவபெருமான் பார்வதிதேவியிடம் அங்குத் தாமரை மலர்களின் மீது வீற்றிருக்கும் முருகனாகிய குழந்தையைச் சுட்டிக்காட்டி,

"ஆதலின் நமது சக்தி ஆறுமுகன் அவனும் யாமும்
பேதகம் அன்றால் நம்போல் பிரிவிலன் யாண்டும் நின்றான்
ஏதமிழ் குழவி போல்வான் யாவையும் உணர்ந்தான் சீரும்
போதமும் அழிவில் வீடும் போற்றினர்க்கு அருள வல்லான்"[4]

என்று திருவாய் மலர்ந்தருளுகிறார். உடனே அன்னை பராசக்தி ஆறு குழந்தைகளையும் ஒன்றாக எடுத்து மார்பில் தழுவுகிறாள். ஆறு உருவங்களும், ஒருருவமாக அதாவது இரண்டு கால்கள், பன்னிரண்டு கைகள், ஆறு முகங்கள் கொண்ட திருவுருவாயின. இதனைக் கந்தபுராணம்,

"எந்தை சக்திகள் ஊறிரெலாம் ஒடுங்குறும் எல்லை
முந்து போலஉன் றாகியே கூடிய முறைபோல
அந்தம் இல்லதோர் மூவிரு வடிவம்ஒன் றாகிக்
கந்தன் என்றுபேர் பெற்றனன் கவுரிதன் குமரன்"[5]

என்ற பாடல் வரிகளைக் கொண்டு உணர்த்துகின்றது.

சிவனைப் போலவே முருகக் கடவுளும் ஐந்து தொழில்களை இயற்றுகிறார். முருகனுடைய கோழிக்கொடி படைத்தல் தொழிலையும், மயில் வாகனம் காத்தல் தொழிலையும், சக்திவேல் அழித்தல் தொழிலையும், இச்சா சக்தியான வள்ளியம்மை மறைத்தல் தொழிலையும், கிரியா சக்தியான தெய்வயானை அருளல் தொழிலையும் செய்கின்றனர்.

இத்தகைய முருகக் கடவுள் வளர்ந்து உமையம்மையிடமிருந்து வேல் பெற்று சூரனை வதம் செய்து, தேவர்களைக் காத்து, பக்தர்களுக்கு அருள் பாலித்துவருகின்றார் என்கிறது கந்தபுராணம்.

சிவபெருமானின் ஆறு முகங்களான, எல்லாவற்றையும் ஆளும் தன்மையுடைய ஈசானம் என்னும் முகத்துடனும், தேவசரீரம், மானுடசரீரம் ஆகியவற்றில் காட்சிதரும் தத்புருட முகத்துடனும், சாந்தமாக இருக்கும் அகோர முகத்துடனும், அறம், பொருள், இன்பம், வீடு அகியவற்றை ஆன்மாக்களுக்கு அருளும் வாமதேவ முகத்துடனும், உயிர்களுக்கு ஜீவகோடிகளைத் தோற்றுவிக்கும் சத்யோஜாக முகத்துடனும், கீழ்நோக்கும் அதே முகமும் சேர்ந்து ஆறுமுகங்களாகி, ஆறுமுகக் கடவுளாக உயிர்களுக்குத் தனிப்பெருங் கருணை புரிகின்றார் சிவபெருமான்.

சிவபெருமான் தம்மை வழிபடும் அன்பர்களுக்குப் பற்பல பேறுகளை அருளும் வகையில் காட்சிதரும் திருவுருவங்களில் முருகனின் திருவுருவமும் ஒன்று. எனவே சிவனும், முருகனும் வேறுவேறானவர்கள் அல்ல. இருவரும் ஒருவரே. சிவனே முருகன், முருகனே சிவன் என்று சமய சான்றோர்கள் உரைப்பது கூர்ந்துநோக்கத்தக்கது.

இந்த வரலாற்றுச் செய்திகளை வைத்து சமயப் பூசல்களையும் கடந்து ஆராய்ந்துப் பார்த்தோமானால், தீய சக்தியை அழித்து நல்மக்களைக் காப்பதற்காகவே முருகக் கடவுளின் அவதாரம் தோன்றியிருக்க வேண்டும் என்பது கந்தபுராணத்தின் வழி தெள்ளத்தெளிவாகத் தெரிகின்றது.

சான்றெண் விளக்கம்

1. தமிழ்க்கடவுள் முருகன் வரலாறும் தத்துவமும் - ப – 31
2. மேலது – ப – 32
3. மேலது – ப – 32
4. கந்தபுராணம் - பா – 1070
5. மேலது பா - 1035

ௐ